செய்தி வெளியீடு எண் : 938　　　　　　　　　　　நாள் : 16.05.2023

**மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர். இராதாகிருஷ்ணன் அவர்கள், ""வள்ளார் பல்லுயிர் காப்பகங்கள்"" என்னும் புதிய திட்டத்தின் கீழ் கால்நடைகளுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதி சேவைக்காக இரண்டாம் கட்டமாக 15 அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியினை காசோலையாக வழங்கினார்.**

கால்நடைகள் / வளர்ப்பு பிராணிகள் உயிர் வாழ்வதற்கு அவற்றின் உரிமையாளர்களை சார்ந்துள்ளது. இந்நிலையில் பல்வேறு காரணங்களால் உரிமையாளர்களால் கைவிடப்பட்ட விலங்குகள் தாங்களே தற்காத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலையில் உள்ளன. இந்த விலங்குகள் உணவு மற்றும் தங்குமிடம் தேடி அலையும் போது, உடலில் காயங்கள் மற்றும் பாதுகாப்பற்ற / கெட்டுப்போன உணவை உட்கொள்ளும் போது தொற்று நோய்கள் போன்ற பல்வேறு உடல்நலக் குறைபாடுகளுக்கு உட்படுகின்றன.

தமிழ்நாடு அரசு 2022–23 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்போது, அனைத்து உயிர்களையும் ஒப்பிட்டுப் பறைசாற்றி "வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று பல்லுயிர் ஓம்பிய வள்ளலாரின் 200 வது பிறந்த ஆண்டை முன்னிட்டு, ஆதரவற்ற கைவிடப்பட்ட காயமடைந்த வளர்ப்புப் பிராணிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளைப் பராமரிக்கும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்காக "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" என்னும் புதிய திட்டம் ரூ. 20 கோடி ஒதுக்கீட்டில் துவக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ்

1. ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட, காயமடைந்த தெருவில் சுற்றி திரியும் பிராணிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளுக்கு உணவு மற்றும் மருத்துவ சிகிச்சை அளிக்க நிதி உதவி வழங்குதல்.

2. காயமடைந்த மற்றும் நோய்வாய்ப்பட்ட விலங்குகளுக்கு அவசர சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக SPCAs / AWOs / NGOs – க்களுக்கு மருத்துவ அவசர சிகிச்சை ஊர்தி (Ambulance) கொள் முதல் செய்வதற்கு நிதி உதவி வழங்குதல்.

3. ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட, காயமடைந்த தெருவில் சுற்றி திரியும் விலங்குகளுக்கு உறைவிடம் (Animal shelter) கட்டுவதற்கு நிதி உதவி வழங்குதல்.

4. தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த கருத்தடை அறுவை சிகிச்சை (Animal Birth Control) மற்றும் ஆதரவற்ற தெரு நாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி செலுத்துவதற்கு நிதி உதவி வழங்குதல் முதலியன மேற்கொள்ளப்படும்.

16.01.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முதற்கட்டமாக ஐந்து அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு முதல் தவணையாக ரூ. 88.05 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டது.

தற்போது இரண்டாம் கட்டமாக இன்று (16.05.2023) மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் 15 அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு ரூ. 1,14,53,501 /- (ஒரு கோடியே பதினான்கு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து ஐநூற்று ஒன்று மட்டும்) நிதியினை காசோலையாக, கால்நடைகளுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதி சேவைக்காக வழங்கினார்.

இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. ஆ.கார்த்திக் இ.ஆ.ப., மற்றும் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறை இயக்குநர் திருமதி எம்.லக்ஷ்மி இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in